சியாங்கேஷேக்கின் "அரசியல் மரணம்" அண்மிவிட்டது !

போர்மோசாவை விட்டுப் புறப்பட மூட்டைகட்டுகிருர்

தம் குழுவினருடன் ஜப்பானில் அடைக்கலம் புகுவார்?

Phone No 4502
விலை அரை அணு

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (19—5—50) வெளியூர் (20—5—50) [இதழ் 256

தன்னம்பிக்கை இழந்து தப்பியோடும் படலம் ஆரம்பம்

ஷூசன்தீவை இழந்து சீன சர்க்கார் ஓட்டம்

"ஷாங்கைக்குத் தெற்கில் 100 மைல் தொலைவிலுள்ள ஷூஷான தீவிலிருந்து, சீன தேசிய சர்க்கார் வெளியேறி விட்டனர். இதன் விளைவாக தேசிய சர்க்கார் போட்டிருந்த கடல் முற்றுகை எடுபட்டு விட்டது; கம்யூனிஸ்டுகளின் முன்னேற்றம் அதிகரித்துள்ளது. விரைவில் கம்யூனிஸ்டுகள் பார்மோசாவைத்தாக்கக்கூடும். சியாங்கேஷேக்குக்கு பார்மோசாவைக் காப்பாற்றும் நோக்கம்கூட இருப்பதாகத் தெரியவில்லை."

என்று, சீன தேசிய சர்க்கார் நிலைபற்றி மேற்கு அரசியல் வட்டாரத்திலுள்ளோர் கருதுகின்றனர். அவர்கள் கூற்றுப்படி பார்த்தால், ஷூஷான் தீவிலிருந்து 150 000 தேசிய துருப்புகள் இரகசியமாக வெளியேறியிருப்பதாகவும், சியாங்கேஷேக்குக்கு இதைவிட வேறு ஏதும் செய்வதற்குத் திறன் இல்லை என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது.

மேற்கு அரசியல் வட்டாரத்தினரில் மற்றொரு பகுதியினர், தோழர் சியாங் இம்மாதிரி விட்டுக்கொடுத்து வெளியேறுவதற்குக்காரணம், கம்யூனிஸ்டுகளின் எதிர்ப்பைக் காரணமாகக் காட்டி, அமெரிக்காவின் ஆதரவைப் பெறுவதற்காகவே என்று கருதுகின்றனர். அதுமட்டுமல்ல, பார்மோசாவில்கூட தங்கியிருக்கும் எண்ணம் தேசிய சர்க்காருக்கு இல்லை என்றும் கருதப்பட்டுகிறது.

மேற்கு அரசியல் வட்டார அறிஞர்களின் கருத்து இதுவென்றாலும், உண்மையைச் சற்று ஆராய்ந்து பார்க்கின்றபோது, சியாங் சர்க்காரின் பலவீனமும், கம்யூனிஸ்டுகளின் முன்னேற்றமும் எந்த அளவில் உள்ளதென்பதற்கு இதோ [illegible] அமைந்துள்ளது.

அமெரிக்காவின் உதவியைப் பெறுவதற்காக சியாங் சர்க்கார், ஷூஷான் தீவைவிட்டு வெளியேறினர் என்று சொல்லப்படுவது எந்தவிதத்திலும் பொருந்தாது. சியாங் சர்க்கார் அமெரிக்காவிடமிருந்து உதவி கிடைத்து வருவது இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக. பணபலமும், ஆயுத பலமும் அமெரிக்காவிலிருந்து சீனாவிற்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

விஞ்ஞானத்தைக் கண்டு முதலாளிகள் கலக்கம்

டெலிவிஷன் ஏற்பட்டால் வரும்படி குறையுமே என்று அஞ்சுகின்றனர்

லண்டன். மே. 18—

விளையாட்டுப் பந்தயங்களை டெலிவிஷன் மூலம் காட்ட ஏற்பாடு செய்தவிட்டால், விளையாட்டைப்பார்க்க வருபவர்கள் குறைந்து, வரும்படி குறைந்துவிடும் என்பதை பிரிட்டிஷ் ஸ்போர்ட்ஸ் நிர்வாகிகள் பிரிட்டிஷ் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலிடம் தங்கள் ஆட்சேபத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

ஸ்போர்ட்ஸ் சம்பவங்களுக்கு டெலிவிஷன் செய்ய லைசென்ஸ் அளிக்கும்போது அந்த ஸ்போர்ட்ஸ் நிர்வாகிகளைக்கலக்காமல்அளிக்கப்படமாட்டாது என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

லண்டன், மே. —

ஷாங்கேக்கு 100 மைலிலுள்ள ஷூஷான் தீவிலிருந்து சியாங் படைகள் வாபஸாகிவிட்டதால் ஷாங்கே கப்பல் போக்குவரத்துத்தடங்கல் இனி இராது என எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷியாவைக்கண்டு அஞ்சுகிருராம் டிட்டோ !

லண்டன், மே. 18—

ரஷ்யா தாக்கும் பட்சத்தில், யூகோவுக்கு உதவி செய்ய மேற்கு வல்லரசுகள் தயாராக இருக்கின்றனவா என்பதை அறிய, டிட்டோ அந்தசர்க்கார்களுக்கு அனுப்ப ஒரு ரகசிய குறிப்பைத் தயாரித்து வருவதாக, பேர்னேயிலிருந்து குளோப் நிருபர் அறிவிக்கிருர்.

டிட்டோ வெளிபார்வைக்கு மிகவும் தைரியமாகவும், தன்னம்பிக்கையுள்ளவர் போல் தோன்றினாலும் பால்கனில் சோவியத் படைகள் நடமாட்டம் குறித்து உள்ளூரக்கவலைப் படுகிருர் என்றே ராஜதந்திர வட்டாரங்களிலிருந்துகிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. —குளோப்

அவர்களுக்கும் அக்கரை இருக்கிறதாம்!

"ஒயிட் ஹால்" அதிகாரி கூறுகிருர்

லண்டன், மே18—

தென்கிழக்கு ஆசியாவிற்கு உதவ நீண்டகால குறிப்ப கால உதவி திட்டம் விஷயமாக ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது குறித்து இங்கு வரவேற்கப்படுகிறது. முதலில் அபிப்பிராய பேதம் இருந்தது ஒயிட் ஹாலுக்கு அதிக கவலை தரவில்லை என்றும், இத்தகைய மாநாட்டில் இம்மாதிரி இருப்பது சகஜமானதென்று எதிர்பார்க்கப்படவேண்டியதுதான் என்றும் ஒயிட் ஹால் அதிகாரி ஒருவர் கூறுகிருர்.

தென்கிழக்கு ஆசியாவுக்கு உதவ வேண்டும் என்பதில் அமெரிக்காவுக்கோ அல்லது இதர காமன்வெல்த் நாடுகளுக்கோ எவ்வளவு அக்கறை உண்டோ அவ்வளவு அக்கறை பிரிட்டனுக்கும் இருக்கிறதென்றும் தன்னால் ஆன உதவியை பிரிட்டன் செய்தே வருகிறதென்றும் தெரிகிறது. தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த 46000 மாணவர்கள் பிரிட்டனிலுள்ள சர்வகலாசாலைகளில் பயிற்சிபெற்று வருகிருர்கள்.

தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக
20-5-50 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு
சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில்
முன்னேற்ற நாடகக் கழகத்தாரால்
சி. என். ஏ. எழுதிய வ. ரா. எழுதிய
கல்சுமந்தகசடர் :: வழக்குவாபஸ் :: அகல்யா
என்னும் மூன்று நாடகங்கள் நடைபெறும்
தோழர்கள் காஞ்சி. மணிமொழியார், க. அன்பழகன், என். வி. நடராசன், வி. முனுசாமி, கே. ஏ. மதியழகன், கே. எம். கண்ணபிரான், பி. வி. முத்துசாமி, கே. டி. பழனியப்பா, சி. வி. ராஜன், டாக்டர் கணேசன், அரங்கண்ணல், கே. ராஜகோபால், ஆர். எம். சாமி, கோ. இறைமுடிமணி. சண்முகம், குருநாதன், மற்றும் பல தோழர்களும் நடிப்பர்.
சென்னை ஐ. சி. பி. பி. சபாவின் பக்கவாத்தியமும் இடம்பெறும்
கட்டணம்: 3, 2, 1. (வரியுள்பட) "மாலைமணி" அலுவலகத்தில் காலை 10-மணி முதல் டிக்கட் விற்கப்படும்
நாடக தினத்தன்று தியேட்டரில் காலை 10 மணி முதல் டிக்கட்டு விற்கப்படும்.
பெண்களுக்குத் தனி இடம் உண்டு.

மாலை மணி

சென்னை 19—5—50 வெள்ளிக்கிழமை

துருக்கி தரும் படிப்பினை

ஆசியாவையும், ஐரோப்பாவையும் நில அமைப்பாலும், கலாச்சாரத்தாலும் இணைத்துக் காட்டுவது துருக்கி. துருக்கி சாம்ராஜ்யத்தின் கொடி ஸ்பெயின் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளிலும், எகிப்திலும், கிழக்கே பாரசீகத்திலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வெற்றியுடன் பரந்து வந்தது. விஞ்ஞானத்துறையிலும், அறிவுத்துறையிலும் ஐரோப்பிய நாடுகள் வேகமாக முன்னேறி, பழைய கொள்கைகளையும், பழக்கவழக்கங்களையும் விட்டுக்கொடுக்காமல் இருந்த துருக்கிக்கு, எதிராகப் புரட்சி செய்து சுதந்திர நாடுகளாக மாறிவிட்டன. பலமுறை படையெடுப்பு, வெற்றி மாறி மாறிக்கிடைத்தன; அதனால் துருக்கிக்கு மிக அருகில் இருந்த கிரீஸ் நாடுகூட சுதந்திரம் பெற்று, துருக்கி சாம்ராஜ்யத்துக்குச் சொந்தமான நாடுகளையே தாக்க ஆரம்பித்துவிட்டது!

குதிரையிலும், ஈட்டியிலுமே நம்பிக்கை வைத்திருந்த துருக்கி; கிரீஸ் நாட்டின் பீரங்கிகளுக்குப் பின், நிலைதடுமாறி பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே துருக்கி சாம்ராஜ்யம் ஆட்டம் கொடுக்க ஆரம்பித்தது. அன்று முதல் ஜார் மன்னனும், ஆஸ்திரியா சக்ரவர்த்தியும, இங்கிலாந்து மன்னர்களும் மாற்றி மாற்றித் துருக்கியை மிரட்டி, பெருநிலப்பரப்பைப் பறித்துக் கொண்டதுடன், ஆசியா நாடுகளில் ஒன்றான துருக்கிக்கு "ஐரோப்பாவின் நோயாளி" என்ற பட்டப்பெயர் சூட்டினர்.

அந்த நோயாளியைக் குணப்படுத்தத் தோன்றினான் கமால். நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நோய் நாகரீகமின்மை, பிற்போக்குத்திட்டங்களில்திட நம்பிக்கை, பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ள மதத்தின் பேரால் தடை ஆகியவைகளெல்லாம் சேர்ந்துதான் துருக்கிக்குத் தொல்லை தரும் நோய் உண்டாக்கியுள்ளதென்று கண்டுபிடித்துவிட்டான் கமால் பாஷா. வாலிபர்களைத் திரட்டிப் புரட்சி செய்தான்; 'பர்தா, தரித்திருந்த பெண்கள் முக்காட்டை எடுத்தெறிந்துவிட்டு, நாட்டு சேவையில் ஈடுபடும்படி தூண்டினான். விளைவு இன்று துருக்கியப் பெண்கள் விமானமேறி ஊர் சுற்றுகின்றனர். ஆணுக்கு அந்நாட்டில் பெண்கள் எந்த வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அந்த நாட்டு நாகரீகத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்!

கமால்பாஷா, துருக்கியை நவீனத்துருக்கியாக்கிய கமால், நோயாளியாக இருந்த துருக்கியைப்பலம் பொருந்தியவனாக்கிய கமால், அவனால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி, குடியரசுக் கட்சி இருபத்தேழு ஆண்டுகள் ஆட்சி நடத்தி, இன்றுபொதுத் தேர்தலில் பெருந்தோல்வியடைந்துள்ளது. முற்போக்குவாதி கமால்பாஷா தோற்றுவித்த கட்சி, தோல்வியடைந்துவிட்டதே, பிற்போக்காளர் பலம் ஒருவேளை வளருகிறதாவென்ற சந்தேகம் தோன்றக்கூடும். இல்லை, தோற்கடித்துள்ள கட்சி ஜனநாயகக்கட்சி-முற்போக்கானது மட்டுமல்ல, எத்துறையிலும் மதப்பற்றற்றது. கமால் பாஷாவால் தோற்றுவிக்கப்பட்ட கட்சி, இன்று பெருந்தோல்வியடைந்திருக்கிறதென்றால், முற்போக்குக் கொள்கைகளுடைய மற்றொரு கட்சி வெற்றி பெற்றிருக்கிறதென்றால், காரணம் குடியரசுக்கட்சி முறைதவறியுள்ளதென்பதைத் தவிர வேறாக இருக்காது.

துருக்கி தந்தபாடம்; கட்சியின் பேரால் ஏதேச்சாதிகாரம் நடத்தும் வெறியர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும். கமால் பாஷாவால் தோற்றுவிக்கப்பட்ட கட்சி, அவருடைய கொள்கைகளைக்குறை கூறுதவகையில்கடைப்பிடித்து வந்தது. மக்கள் முன்னேற்றம் தான் முக்கிய வேலையென்று கருதியதால், தன்னுடைய அதிகாரத்தை வளர்த்துக்கொண்டு அடுத்ததேர்தலில் மீண்டும் பதவிக்குவர ஆகவேண்டிய செய்வதில் என்றும் குடியரசுக் கட்சி ஈடுபட்டிருந்ததில்லை. மற்றும் எதிர்க்கட்சிகள் வளர எல்லா விதமான சௌகரியங்களும் செய்துகொடுத்திருந்தது. அவ்வளவு நல்ல கட்சி இன்று மண்ணைக்கவ்வியுள்ளது! காரணம் மக்கள் மனம் மாறியுள்ளதால்தான்.

நாங்கள்தான் சுயராஜ்யம் வாங்கிக்கொடுத்தோம். ஆகையால் ஆளத்தகுதியுள்ளவர்கள் "நாங்கள்தான்" என்று காமராஜர் கூறுகிறார். "பல கட்சிகள் தோன்றினாலும், காங்கிரஸ் 'யானை' புறப்படும் போது, அவைகள் காலில் மிதிபட்டுப்போய்விடும்" என்று சர்தார் கூறுகிறார். அதுவுமின்றி எதிர்க்கட்சிகளை நசுக்க இரவு பகலாகத் திட்டம் வகுக்கிறார்கள் ஆட்சியாளர்கள். அவர்களுக்குக் கூறுகிறோம், மீண்டும் பதவிக்கு வர முடியாது முறை மாற்றிக்கொள்ளாவிட்டால் என்று. நாங்கள் கூறுவதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்காது! எதிர்க்கட்சி 'சூழ்ச்சிசெய்து, கவிழ்த்துவிடப்பார்க்கிறதென்று நீங்கள் எண்ணிக்கொண்டிருப்பதால். அதனால்தான் துருக்கியாவது உங்களுக்குப்பாடமாக இருக்கட்டுமென்று சுட்டிக் காட்டுகிறோம்.

சியாங்கே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குள் நுழைந்தவண்ணமிருக்கின்றன. அப்படியிருந்தும் சியாங் சர்க்காரைக்காப்பாற்ற அமெரிக்காவால்முடியவில்லை சியாங்கேயின் முகவரி என்ன என்று உலகம் கேட்கும்படியான நிலை ஏற்பட்டதுதான் கண்ட பலன்

இந்நிலையிலேதான் சியாங், பார்மோசாவைப் புகலிடமாகக்கொண்டார். அந்தப்புகலிடத்துக்கும் ஆபத்து வந்துவிட்டது இன்று. எனவே, தோழர் சியாங் அரசியலை மறந்த தனது அருமுயிரைப் பற்றி நினைக்க வேண்டிய கட்டத்துக்குவந்து விட்டார். இதுதான் உண்மை. இதனைச் சுருக்கச் சொல்லவேண்டுமானால் தேசிய சீனாவின் ஆட்சி முறைக்கு அந்திய காலம் நெருங்கிவிட்டது என்றே சொல்ல வேண்டும். சீன தேசியசகாப்தம் முடிவடைந்து, பொதுவுடைமை ஆட்சி மலர ஆரம்பித்துவிட்டது.

இதற்கு விளக்கம் தேடி அலையத்தேவையில்லை. அமெரிக்க அதிகாரி ஒருவரே கூறுகிறார், கம்யூனிஸ்டுகளின்பலம் வளர்ந்துள்ள விதத்தை. "படையெடுப்பின்போது கம்யூனிஸ்டுகளிடம்பலம் பொருந்திய கடற்படை இருந்தது. அவை சோவியத் சர்க்காரால் அளிக்கப்பட்டது. பின்வாங்கிச் செல்லும் போர்க்கப்பல்களைத் துளைக்கவல்ல சக்தி வாய்ந்தவை" என்று கூறியுள்ளார் அவர். அவர்மேலும் கூறுகையில், "இனி பயன் படாது என்று கண்ட அளவிலே கடற்படை முற்றுகையையும், பலம் பொருந்திய போர்க்கருவிகளையும் எறிந்து விட்டனர்."

"கம்யூனிஸ்டுகள் பார்மோசாவைக் கைப்பற்றுவார்களாயின், ஹாங்காங் சக்தியற்றதாகிவிடும். கம்யூனிஸ்டுகளின் ஆக்கிரமிப்பே அதிகரித்து, அங்கிருக்கும் பிரிட்டிஷார் அவதிக்குள்ளாகவும் நேரிடும்." என்று கூறியுள்ளார்

எனவே, சீன தேசிய சர்க்காரின் ஆட்சி அதன் இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பது, உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறது. இந்நிலையிலே, தோழர் சியாங் அமெரிக்காவின் உதவியை நாடுவதோ, அன்றி தேசிய சர்க்காரைக் காப்பாற்ற நினைப்பதோ பயனற்ற பணியென்றே கூற வேண்டும்.

மேற்கொண்டு கிடைத்திருக்கும் செய்திகளிலிருந்து தோழர் சியாங்கும், அவரது குழுவினரும் பார்மோசாவை காலிசெய்துவிட்டு, ஓட்டமெடுத்தமாகிவிட்டனர் என்று தெரிகிறது. கம்யூனிஸ்டுகளின் படையெடுப்பு வலுத்து, சியாங் குழுவினர் தப்பியோடும் நிலைமை ஏற்பட்டால், அவர்கள் ஜப்பானுக்குச் சென்றுவிடக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

———

ஓஸகா, மே 18—

ஜப்பானிலுள்ள மில்களுக்கு கதிர்கள் அதிகரிக்க வேண்டும் என்ற ஜப்பானிய கோரிக்கையை பிரிட்டிஷ் யு. எஸ். ஜவுளி கோஷ்டி அங்கீகரித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

யு. பி. யில் ஜமீன்தாரர் கொடுமை

பொறுக்கமுடியாமல் மக்கள் கம்யூனிஸ்டுகளாக மாறுகின்றனர்!

உத்திரப்பிரதேச மாகாணத்தில் ஜமீன்தாரி ஒழிப்புத் திட்டத்தைச் சில ஜமீன்தார்கள் எதிர்ப்பதால் பண்ணைகளில் வேலை செய்து வந்த தொழிலாளிகள் தலைமறைவாகச் சென்றுவிட்டார்கள். இவர்கள் எந்த நேரத்தில் என்ன செய்வார்களோ என்ற பயத்தால், ஜமீன்தாரர்கள் நடுங்கிக்கொண்டு இருக்கிறார்களாம்!

இம்மாகாணத்தில் உள்ள பல்லிய என்ற ஜில்லாவில் கம்யூனிஸ்டுகள் பலம் பெற்று வருகிறார்களென்று 'ஆட்டம்' பிரத்தியேக நிருபர் அறிவிக்கிறார்.

"பல்லியா காஜியாபூர், அஜம்கரா என்னும் ஜில்லாக்கள் கூடுமிடத்தில் உள்ள 15 கிராமங்கள் கம்யூனிஸ்டுகளின் கோட்டையாக விளங்குகிறதாம். இந்தக் கிராமங்களின் மக்கள் பல ஆண்டுகளாக ஜமீன்தார்களால் நசுக்கப்பட்டு வந்தவர்கள். வளப்பமற்ற தங்களுடைய மேட்டு நிலங்களைப் பயிரிடவேண்டும். இல்லாவிட்டால், மிகக் குறைந்த கூலிக்கு ஜமீன்தாரர்களுக்கு மாடாக உழைக்க வேண்டும்.

கொடுமை தாங்க முடியாமல் இந்தக் கிராமங்களில் வாழும் மக்கள், கம்யூனிஸ்டுகளாக மாறிவிட்டார்கள். ஓராண்டாகவே 'கிசான்' களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும் இப்பகுதியில் சச்சரவு ஆரம்பித்துவிட்டது.

இந்தியா குடியரசான பிறகு, இக்கிராம மக்கள் கட்டுப்பாடாக வேலை செய்து வருகிறார்கள். தலைமறைவாகச் சென்றுவிட்ட பல கம்யூனிஸ்டுகள் இங்குதான் ஒளிந்துகொண்டிருக்கிறார்களென்றும், இரகசியப் போலீசார் செய்திகொடுத்தும் ஜில்லா அதிகாரிகள் ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியவில்லையாம்!

ஒரு தடவை இரகசியப் போலீசார் இந்தக் கிராமங்களில் நுழைந்தபோது 400க்கு மேற்பட்ட கிராம ஆட்கள் கூடிக்கொண்டு இவர்களை அடித்துத் துரத்திவிட்டார்களாம்! துப்பாக்கிகள் கூடத் தாராளமாக உபயோகப்படுத்தப்பட்டனவாம். இந்தக் கைகலப்பில் 4 பேர் உயிரிழந்ததோடு, 12 பேருக்கு மேல் காயமடைந்தார்கள்.'!

இது சம்பந்தமாகச் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்களாம்.

முன்னாள் இட்லர் படை இந்நாள் ரஷ்ய படையாகிறது!

கருப்புச்சட்டைப் படை தயாராகிறதாம்

'டெய்லி ஹெரால்ட்' தரும் தகவல்

லண்டன், மே. 18—

ஹிட்லரின் அக்காலத்திய படையினரைக் கொண்டு, ரஷ்யர்கள் ஸோவியத் ஜெர்மனியில் போலீஸ் ராணுவத்தை அமைத்திருக்கின்றனர். இவர்களுக்குக் கருப்பு யூனிபாரம் அளிக்கப்பட்டிருப்பதுடன், நல்ல பயிற்சி தரப்பட்டுவருவதாகவும், டெய்லி ஹெரால்ட் பத்திரிகையின் நிருபர் டெனிஸ் மார்டின் குறிப்பிட்டிருக்கிறார்.

முன்பு நாஜி ஜெனரல்களாக இருந்த சிலர், இப்பொழுதும் அதிகாரிகளாக இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

இதற்காக பயிற்சி கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றும், ராணுவவேலைகளுடன் போலீஸ் வேலைகளையும இப்படையினர் செய்து வருவர் என்றும் தெரியவருகிறது.

ஏஜண்டு தேவை

திருச்சியில் நமது "மாலை மணி"யை விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு தேவை!

நிர்வாகி,
"மாலைமணி"

காசி இந்து பல்கலைக் கழகத்தில் கட்டுரைப் போட்டி

சென்னை, மே 18—

'மாம் வெகுன் ஒன்றே' என்ற அவைத தத்துவ விஷயமாக சங்கரும், மிராட்லும் வெளியிட்டுள்ள கருத்துக்களைக் கொண்ட ஒரு கட்டுரை அனுப்பவேண்டும் என்றும், எந்த சிறந்த கட்டுரையோ அதற்கு ரூ. 200 பரிசு அளிக்கப்படும் என்றும் காசி இந்து சர்வ கலாசாலை ரிஜிஸ்திரார் அறிவித்திருக்கிறார்.

ராசிங் பிரசாத், ஹரி பிரசாத் புஷ் என்டோமெண்ட்படி இந்த போட்டி நடத்தப்படுகிறது.

இந்த கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்பவர் புலால் உண்பவராக இருக்கக்கூடாது என்றும், லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பவராக இருக்கக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கட்டுரை எழுதியவர் இவர்தான் என்பதும், இவர் லாகிரி வஸ்துக்கள் உபயோகிப்பவரல்ல புலால் உண்பவரல்ல என்பதுபற்றியும் ஒரு தீதி இலாகா அதிகாரியோ அல்லது மிஷனரியோ அத்தாட்சி அளிக்க வேண்டும். கட்டுரை எழுதுபவர்கள் பெயர் எழுதப்படக்கூடாது.

பள்ளிகளில் 'குடியரசு'த் தலைவர் படம் வைத்துக்கொள்ளும்படி வற்புறுத்தல்

—(0)—

பம்பாய் ஓவியர் வரைந்த படத்தையே வாங்க வேண்டுமாம்!

—(0)—

சென்னை சர்க்காரின் ஆணவ உத்தரவு

பம்பாயிலுள்ள ஒரு குறிப்பிட்ட ஓவியர் தீட்டிய இந்தியக் குடியரசுத் தலைவர் உருவப்படத்தை எல்லாப்பள்ளிகளிலும், ஸ்தல ஸ்தாபனக் காரியாலயங்களிலும் வைக்க வேண்டுமென்று, சென்னை சர்க்கார் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

வெள்ளைக்கார ஆட்சியின் காலத்தில்தான் ஜார்ஜ் மன்னர் படத்தையும், மேரி ராணியார் படத்தையும் வையுங்கள் என்று வெள்ளைக்காரன் தொல்லை கொடுத்தான். அவன் ஒழிந்தும்; உருவப் படங்களை வைத்துக்கொள்ளுங்கள் என்று வற்புறுத்தும் தொல்லை ஒழியவில்லையே என்று, பொதுமக்கள் ஆத்திரம் கொண்டுள்ளார்கள். இவ்வாறு உருவப்படங்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது, சுயேச்சையுடன் விளங்கும் ஸ்தல ஸ்தாபனங்களை வற்புறுத்துவதாகு மென்றும் கருதப்படுகிறது.

மற்றும் குடியரசுத் தலைவர் படத்தை வைத்துக்கொள்ள விரும்பினாலும், ஒரு குறிப்பிட்ட ஓவியர் தீட்டிய படத்தை வைத்துக்கொள் என்று சர்க்கார் உத்திரவிடுவது ஆணவமும், யதேச்சாதிகாரமுமான செய்கையாகும்.

பம்பாய் ஓவியருக்குச் சிபார்சு செய்ய, மந்திரி சபையில் ஆள் இருக்கிறதென்று செய்தியறிந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

லட்சக்கணக்கான ரூபாய்களை ஸ்தலஸ்தாபனங்கள், சர்க்கார் உத்திரவை நிறைவேற்றச் செலவிடவேண்டியிருக்கும்.

சர்க்கார், குடியரசுத் தலைவர்படத்தைப் பள்ளிகளிலும், மற்ற காரியாலயங்களிலும் வைக்கவேண்டுமென்று விரும்பியிருந்தால், பல ஓவியரால் வரையப்பட்ட படங்களை அனுப்பவேண்டுமென்று விளம்பரப்படுத்தி, அனுப்பப்பட்டவைகளில் சிறந்த படத்தையே சிபார்சு செய்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது.

ஐ. நா. லிபியகௌன்சில்

திரிபோலி, மே 18—

ஐ. நா. லிபியக் கமிஷனரும், லிபிய ஆலோசனைக் கௌன்சில் மெம்பர்களும் பெங்காஸுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கின்றனர். மே 24-ந் தேதி வாக்கில் சிரெனய்காவுக்கு இக்கோஷ்டி செல்லும். பின்னர் திரிபோலிடானிய மாகாணங்களுக்கு இக்கோஷ்டி விஜயம் செய்யும்.

இக்கௌன்சிலின் சென்ற கூட்டத்தில் லிபியாவுக்கான அரசியல் வகுக்க, ஒரு தேசிய அசெம்பிளியைக் கூட்டுவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

புது கைகலப்பு ஏற்படலாம்

லண்டன், மே 18—

கிழக்கு இந்தோனேஷ்யாவில் புது கைகலப்பு ஏற்படலாம் என்று, இந்தோனேஷ்ய பொது காப்பிலாகா அதிகாரி ஒருவர் கூறினார். தென் மொலுக்காஸ்களைத் தாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், தென்செலிபஸ் கிழக்கு இந்தோனேஷ்யாவிலிருந்து பிரிந்து இந்தோனேஷ்யக் குடியரசுடன் சேர்ந்துகொண்டு விட்டதாகவும் அவர் கூறினார்.

சோவியத் குற்றச்சாட்டுக்கு வாஷிங்டன் மறுப்பு

வாஷிங்டன், மே 18—

அமெரிக்க காமிரா நிபுணர்களைக்கொண்டு ரஷ்ய எல்லையின் படம் பிடித்து உளவுத்தொழில் புரிய முயற்சித்து வருகிறது என்று, ரஷ்யா சாட்டியிருந்த குற்றச்சாட்டை அமெரிக்க சர்க்கார் உத்தியோக பூர்வமாக மறுத்திருக்கிறது.

[illegible]கப்பல் தபால்

எஸ். எஸ். ரஜூலா என்ற கப்பல், முன் அறிவித்திருந்தபடி சென்னையிலிருந்து மே 18-ந் தேதி புறப்படுவதற்குப் பதிலாக, மே 20-ந் தேதியன்று பினாங்கு வழியாக சிங்கப்பூருக்குப் புறப்படுகிறது. சென்னை நகர கிளைத் தபாலாபீசுகளில் மே 18 ந் தேதியும், சென்னை ஜி. பி. ஓ. வில் மே 19-ந் தேதி மாலை 4-30 மணி வரையும் போடப்படும் தபால்கள் இந்தக் கப்பலில் அனுப்பப்படும்.

ஸாவூதி அரேபிய-ஜார்டன் எல்லையில் வெட்டுக்கிளி தொல்லை

அம்மான், மே 18—

ஸாவூதி அரேபிய—ஜார்டன் எல்லையில் வெட்டுக்கிளிகளின் தொல்லை ஏற்பட்டிருக்கிறது. இதை ஒடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

காமாவின் பெண் தலைவியாக முடியுமா என யோசனை

லண்டன், மே. 18—

வெள்ளையமாதை மணந்த ஆப்பிரிக்க பாமங்வாடோ ஜாதியின் தலைவர் காமாவுக்கு ஒரு பெண் பிறந்திருப்பதால், அப்பெண்ணே அவ்வகுப்பின் எதிர்காலத் தலைவியாக வர வேண்டுமா என்பது பற்றி ஆலோசிக்க, இந்த வகுப்பினரின் கூட்டம் ஒன்று கூட்டப்படவிருக்கிறது.

இப்பெண் குழந்தையையே தலைமைப் பதவிக்கு வாரிசாக நியமிக்க வேண்டும் என்று பொதுவாக அபிப்பிராயம் இருந்து வருகிறது. ஆனால், இதுவரையில் இந்த ஜாதியினருக்கு, ஒரு பெண், தலைவியாக இருந்ததில்லை. காமாவின் வாரிசாக ஒரு ஆண் குழந்தை பிறக்குமவரையில் மாஜி ரீஜெண்ட் ஷெகெடி தான் ரீஜெண்டாக இருந்துவர வேண்டும். (குளோப்)

மேலும் 4 இடங்களில் டெலிபோன் வசதி

சென்னையில் மேலும் நான்கு இடங்களில் அதாவது, யானைக்கவுனி போலீஸ் ஸ்டேஷன், ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன், ராயபுரம் போலீஸ் ஸ்டேஷன், பெரம்பூர் கார்ப்பொரேஷன் ஓவர்ஸியர் ஆபீஸ் ஆகிய இடங்களில்—பொது ஜனங்களின் உபயோகத்துக்காக டெலிபோன்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

காமன்வெல்த்திற்கு 'டெக்னிகல்' உதவி

ஸிட்னி, மே 18—

காமன்வெல்த் நாடுகளுக்கும் ஆசியாவிலுள்ள இதர நாடுகளுக்கும் டெக்னிகல் நிபுணர்களை அனுப்பி உதவ ஆஸ்திரேலியா சமரஸ உதவி திட்டம் மூலம் தயாராக இருக்கிறதென்று தெரியவருகிறது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

21 - 5 - 50

ஆற்காடு:—இரா. நெடுஞ்செழியன், என் வி. நடராசன்.
குடியேற்றம்:—க. அன்பழகன்.
கடலூர்:—சி. பி. சிற்றரசு.
மேலக்கோட்டையூர், சின்னையாபுரம்:—இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி
ஆலத்தூர்:—ஏ. சித்தையன், திருக்குறள் முனுசாமி குமார தணிகாசலம்,
சிறுத்தொண்டநல்லூர்:—எம். எஸ். இராமசாமி, ச. சிவசங்கு, பணிமொழி, அறவேந்தன்.
அகரப்புதூர்:—பி. கிருட்டினசாமி, பி. எஸ். இளங்கோ, ஆர். இளஞ்செழியன், சாவித்திரி, கூத்தரசன்.
மதுரை:—டி. கே. சீனிவாசன், எஸ். முத்து, எம். அய்யாசாமி

கோவிந்தன் அண்ட் கம்பெனியாரின்

மருதநாட்டு இளவரசி

மகத்தான 6-வது வாரம்
சாகர் & சயானியில்

★

தினசரி 3 காட்சிகள்

★

19-5-50 முதல் 3-வது வாரம்
கிரவுன் & திருமகள்
(சைதாப்பேட்டை)

மேல் வகுப்புகளுக்கு டிக்கட்டுகள் முன்னதாக ரிசர்வ் செய்யப்படும்

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

மே 27-5-50 சனி, ஞாயிறு நாட்களில் கோவையில் நடைபெறும்

இசையரங்கில் கலந்துகொள்ளும் இசைவாணர்கள்

சி. எஸ். ஜயராமன், லோகநாதன், டி. வி. நமசிவாயம்

வரவேற்புக்குழுவினர்

நெல்லூரில் செம்புக்கனிகள்

—(0)—

நில ஆராய்ச்சிக் கழகம் தரும் தகவல்

சௌராஷ்டிராவில் ராஜ்பூர் என்ற இடத்துக்கருகே, பூச்சுவர்ணம் தயாரிப்பதற்கு உபயோகப்படக்கூடிய அயக்கலப்புள்ள ஒருவகைக் களிமண்ணும், ஒரிஸ்ஸாவில் கஞ்சாபூர் சமஸ்தானத்தில் புதிய சுண்ணும்புக் கல் படிவுகளும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக இந்திய பூகர்ப்ப ஆராய்ச்சிக் கழகத்தில், 1949, அக்டோபர்—டிசம்பர்—மூன்று மாதத்துக்கான அறிக்கை கூறுகிறது.

ராஜஸ்தானில் கோடாவிலும், பஞ்சாபில் அம்பாலா ஜில்லாவிலும், மத்தியப் பிரதேசத்தில் ராய்காரிலும் சுண்ணும்புக் கல் படிவுகளைப் பரிசோதித்துப் பார்க்கும் வேலை தொடர்ந்து நடைபெற்று வந்தது.

மத்தியப் பிரதேசத்தில் மாங்கனிஸ் கனிகளும், சென்னைமாகாணத்தில் நெல்லூர் ஜில்லாவில் செம்புக் கனிகளும் அடைப்பதற்குள்ள தோதுகள் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வந்தன.

பஞ்சாபில் ஜ்வாலாமுகிப் பிரதேசத்தில் எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆரம்ப ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன பதான்கோட்டிலும் அஸ்ஸாமில் காரோ குன்றுகளிலும் எண்ணெய் ஊற்றுக்கள் இருப்பதாகச் சொல்லப்பட்ட இடங்களில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. ஆனால் அவை பொருளாதார வகையில் போதிய முக்கியத்துவமுள்ளவையாகக் காணப்படவில்லை.

மத்தியப் பிரதேசம், விந்தியப் பிரதேசம், பிஹார் ஆகிய இடங்களில் மண்பாண்டத் தொழிலுக்கு வேண்டிய களிமண் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. பிஹாரிலும் அஜ்மீரிலும் அப்ரகம் கிடைக்கும் இடங்களும், கியோன்ஜாரில் க்ரோமைட்கிடைக்கும்இடங்களும் ஜாவார் என்ற இடத்தைச் சுற்றிலுமுள்ள ஈய-துத்தநாகச் சுரங்கங்களும் பூமி வர்ணனைப் படங்களில் குறிப்பிடப்பட்டன. தாமோதர் பள்ளத்தாக்கில் அயனைட், அபாடைட், ஃடியாடைட் ஆகிய தாதுப் பொருள்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

இந்திய பூகர்ப்ப ஆராய்ச்சிக் கழகம், பாக்ரா, கோஸி, உறிராகுத், தாமோதர் ஆகிய அணைத் திட்டங்களில் வே-3-ல் நடந்துவந்தது. மோவ் கன்டோன்மெண்டில் தண்ணீர் சப்ளை நிலைமையையும் இக் கழகம் ஆராய்ந்து பார்த்தது.

1949, அக்டோபரிலிருந்து டிசம்பர் வரையுள்ள மூன்று மாதங்களில் இக்கழகத்தைச் சேர்ந்த ஆபீஸர்கள் கழகம் நடத்திய ஆராய்ச்சிகள் பற்றி சுமார் 95 அறிக்கைகள் தயாரித்திருக்கின்றனர். கழகத்தைச் சேர்ந்த தகவல் அறிவிப்பு ஸ்தாபனம், இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தகவல் கோரி செய்துகொள்ளப்பட்ட சுமார் 600 விண்ணப்பங்களுக்கு பதில் அனுப்பியிருக்கிறது.

சந்தையில் கொலை

சங்கரன்கோவில், மே 16—

நேற்று இக்கர் மாட்டுத்தாவணி சந்தையில், ஒரு பெண் கொலையுண்டு கிடந்தாள். கொலைக்குக் காரணம் தெரியவில்லை. பெண் தாழ்த்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவள் என்று தெரியவருகிறது. இதுவரை யாரும், இதுவரை கைது செய்யப்படவில்லை. போலீஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (ஓ—றி)

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

	ரு. அ. பை
முன்வரவு	2451—0—6
தி.மு.க சங்கரைப்பேட்டை (குடியேற்றம்) கிளை	15—0—0
வி. மு. சந்திரசேகரன், ,,	1—0—0
ஜி. சி. ரகுபதி, ,,	1—0—0
வ. கிருஷ்ணன், சென்னை ஓட்டேரி	1—0—0
சுந்தரபெருமாள், ,,	0—8—0
ப. ரங்கநாதன், ,,	0—8—0
நாகபூஷணம், ,,	0—8—0
கணேசன், ,,	0—8—0
யூனஸ்கான், ,,	0—8—0
ராமச்சந்திரன், ,,	0—8—0
ஆலாலசுந்தரம், ,,	0—8—0
நடராஜன், ,,	0—8—0
லோகநாதன், ,,	0—8—0
திருவேங்கடம், ,,	0—8—0
மணவாளன், ,,	0—8—0
அசலப்பன், ,,	1—0—0
தி. மு. க பட்டுக்கோட்டை கிளை	14—0—0
கே. பச்சையப்பன், பட்டுக்கோட்டை	2—0—0
கே. ரங்கசாமி, ,,	2—0—0
கோ. நாடிமுத்து, ,,	2—0—0
எஸ். சண்முகம், ,,	1—0—0
ஆர். சீனிவாசன், ,,	2—0—0
சுவாமிநாதன், ,,	1—0—0
கே. ராதாகிருஷ்ணன், ,,	1—0—0
தனபால், ,,	1—0—0
ஆர். ஜோதி, ,,	1—0—0
மாணிக்கம், ,,	1—0—0
நா. சோ. பிச்சை, ,,	1—0—0
டி. நாகராஜன், ,,	1—0—0
அ. சுந்தரம், விருதுநகர்	1—0—0
பி. எஸ். ஷேக், பழனி	2—0—0
எம். கே. என். கரீம், ,,	2—0—0
எஸ். முகம்மது அலி, ,,	1—0—0
செ. லோகநாதபாண்டியன், குறும்பலாப்பேரி	2—0—0
ப. த. தேவதாஸ் செல்லத்துரை ,,	2—0—0
சு. மா. சாமி ,,	1—0—0
வ. க. வைத்திலிங்கம், ,,	1—0—0
ம. தங்கசாமி, ஆவுடையானூர்	2—0—0
கு. கருவேலம், ,,	1—0—0
குருககட்டையா, பாலூர் சத்திரம்	1—0—0
சு. சண்முகம், ,,	1—0—0
எம். கே. சாமி, ,,	1—0—0
ஏ. சங்குகிருஷ்ணன், நாட்டார்பட்டி	2—0—0
சு. தங்கையா, மூலக்கரையூர்	2—0—0
எஸ். வி. சங்கரபாண்டியன், சுரண்டை	2—0—0
என். கே. எஸ். அண்ணாமலை, ,,	1—0—0
ப. களஞ்சியம், பெத்தநாடார்பட்டி	2—0—0
சே. எஸ். வெள்ளசாமி, பஞ்சபாண்டி	1—0—0
எஸ். வி. நடராஜ்சிங், ,,	1—0—0
செல்லக்கனி, பாலூர் சத்திரம்	0—8—0
தூத்துக்குடி மேலச்சண்முகபுரம் தி. மு. கழகத்தோழர்கள்	5—0—0
சே. வேதாசலம், சென்னை	1—0—0
பி. கோவிந்தராசன், ,,	1—0—0
என். அப்பர், ,,	1—0—0
ஏ. சிவஞானம், ,,	1—0—0
வி. முத்துசாமி, ,,	1—0—0
சே. எம். கோவிந்தசாமி,	1—0—0
எம். ஜே. வேல்முருகன் ,,	1—0—0
கே. பார்த்தசாரதி, ,,	1—0—0
சி. வி. ரங்கநாதன், ,,	1—0—0
எஸ். சுந்தரராஜன், ,,	1—0—0
ல. தங்கவேல், திருமங்கலம்,	1—0—0
பெங்களூர் பழக்கடைத்தோழர்கள் ஆ. சே. கணேசன் மூலம்	7—0—0
பி. நாகலிங்கம், மதுரை	1—0—0
சனகராஜ், ,,	1—0—0
கே. சி. இளந்தாடி, ,,	1—0—0
கருப்புசாமி, ,,	1—0—0
துரைசாமி, ,,	1—0—0
எம். எஸ். முத்தையா, மதுரை	1—0—0
கிருஷ்ணன், ,,	1—0—0
ஜேம்ஸ் சிட்னி, ,,	1—0—0
தி. மு. க. — லால்குடி கிளை	10—0—0
ப. சிவப்பிரகாசம், நாகை	1—0—0
ப. சுப்பையா, ,,	1—0—0
என். வி. வேலன், மணப்பாறை	1—1—0
இரா. கிருட்டிணன்,	2—0—0
தி. மு. க.—வடக்கூர் (தூத்துக்குடி) கிளை	10—0—0
	2591—1—6

'கம்யூனிஸ்டுக் கொள்கைக்கு விரோதமான படங்களைக் காட்டாதே'

சினிமாதியேட்டருக்கெதிரே மறியல்

நகரில் 6 பேர் கைது!

சென்னை, மே 18—

மவுண்ட்ரோடு நியூகுளோப் தியேட்டருக்கு எதிரில் மறியல் செய்ததாக சங்கரன், பாஸ்கரன், பகுலவன் என்ற 3 ஹோட்டல் ஊழியர்களை நேற்றுமாலை போலீசார் கைது செய்தனர். மேற்படி தியேட்டரில் தற்போது ஓடும் இரும்புத்திரை என்ற படம், ரஷ்ய கம்யூனிஸ்டு கொள்கைக்கு விரோதமாயிருப்பதாகவும், அதைப் பொதுமக்கள் பார்க்கக்கூடாதென்றும் மேற்குறிப்பிட்ட நபர்கள் மறியல் செய்ததாகக் கூறப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட படத்தை பார்க்கக்கூடாது என்று வற்புறுத்தி சில விளம்பரங்களை சுவற்றில் ஒட்டியதாக, பிராட்வேயில் மற்றும் 3 பேர்களை நேற்று போலீசார் கைது செய்தனர்.

தெ. மே. ஆ.-வின் எதிர்காலம்

ஹேக், மே 17—

தென்மேற்கு ஆப்பிரிக்கா விஷயமாக ஐ நா. சமர்ப்பித்த விவகாரம், நேற்று சர்வதேசக் கோர்ட் முன்பு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

சர்வதேசக் கோர்ட் முடிவான தீர்ப்பு எதையும் அளிக்காதென்றாலும் காலனி தென் ஆப்பிரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கவேண்டுமா, அல்லது ஐ. நா.வின் தர்மகர்த்த பொறுப்பில் இருக்கவேண்டுமா என்று தன் அபிப்பிராயத்தை வெளியிடும்.

இந்தப் பிரதேசத்தின் நிர்வாக விஷயமாக தென்னாப்பிரிக்கா ரிப்போர்ட் சமர்ப்பிக்க மறுத்துவிட்டதினால் ஐ. நா இவ்விஷயத்தை சர்வதேச கோர்ட் முன்பு சமர்பிக்க வேண்டியதாயிற்று. அத்துடன் மட்டுமின்றி, இப்பிரதேசத்தை தன்னுடன் சேர்த்துக் கொள்ளவும் மலான் சர்க்கார் விரும்பியது

சர்வதேசக் கோர்ட் இவ்விஷயமாக வெளியிடும் அபிப்பிராயம் ஐ. நா.வின் மதிப்பு உயரவோ அல்லது தாழவோ செய்யும்படியாக இருக்கும் என்றும் ஆகவே இந்த அபிப்பிராயம்பற்றி அறிய பல வட்டாரங்களில் ஆவல் காட்டப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. தென்மேற்கு ஆப்பிரிக்கா மாஜி ஜெர்மன் காலனி என்றும், சர்வதேச மாண்டேட் பெற்ற இது ஒன்றுதான் ஐ. நா. தர்மகர்த்த பொறுப்புக்கு இன்னும் மாற்றப்படாமல் இருக்கிறது என்றும் ஹெர்மான் கோயரிங்கின் தகப்பனார் இதன் முதல் ஜெர்மன் கமிஷனராக இருந்தார் என்றும் கூறப்படுகிறது.

பாரிஸ், மே 17—

ஜப்பானிய வர்த்தக ஏஜென்ஸி, சீக்கிரமே பாரிஸில் ஏற்படுத்தப்படும் என்று தெரிய வருகிறது.

ஹைட்ரஜன்குண்டுபற்றி அமெரிக்கர் கவலை

நியூயார்க், மே 18—

"நாங்கள் மிக சாதாரண அமெரிக்க பிரஜைகள். நாங்கள் பிரபலஸ்தர்களல்ல, நாங்கள் ஜலவாயுக் குண்டுக்கு இலக்காக விரும்பவில்லை. குழந்தைகுட்டிகளுடன் வாழவே விரும்புகிறோம். ஜலவாயுக்குண்டு விபரீதத்தைத் தடுக்க ஏதாவது வழி செய்தாகவேண்டும்" என்று 15 அமெரிக்க ஆண்களும், பெண்களும் கையெழுத்திட்டதாக கடிதம் ஒன்றை "கிருஸ்டியன் ஸயன்ஸ் மானிடர்" பிரசுரித்திருக்கிறது.

அவர்கள் அந்த உருக்கமான கடிதத்தில் எழுதியிருப்பதாவது:—

நாங்கள் மிக சாதாரண மக்கள். ஆனால், ஜலவாயு குண்டினால் இறக்கப் போகிறவர்கள் நாங்களே. நூற்றுக்கணக்கான சதுரமைல் விஸ்தீரணத்திலுள்ளவர்களை அடியோடு ஜலவாயுக் குண்டு ஒழித்து விடும் என்று பத்திரிகைகளும், ரேடியோக்களும் பிரசாரம் செய்து வருகின்றன. நாங்கள் உயிருடன் வாழவேண்டுமென்றால் இந்த விபரீதத்தைத் தடுக்க ஏதாவது வழி செய்யுங்கள்.

இவர்கள் இக்கடிதத்தைப் படிக்கும் இதர அமெரிக்கர்களையும் இதுபற்றி காங்கிரஸ் மெம்பர்கள், செனட் [illegible] பிரஸிடெண்ட் ட்ருமன் [illegible] கடிதம் எழுதும்படி கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ரஷ்யர்களும் இறக்கவிரும்பமாட்டார்கள் என்றும், ஆகவே ஏதாவது ஒரு சமாச ஏற்பாட்டிற்கு வரவழி ஏற்படும் என்றும், அதற்காக வழிகளைத் தேடவேண்டும் என்றும் இக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

நாயைக் கடித்தான்!

வாஷிங்டன், மே 18—

ஒரு நாயைக் கடித்ததற்காக ஒருவனை போலீஸார் கைது செய்து, அவனுக்கு சித்தஸ்வாதீனமிருக்கிறதா என்று பரிசோதிக்க அழைத்துச் சென்றனர்.

"அது என் நாய். அதை நான் என்னவேண்டுமானாலும் செய்வேன். அதை நீங்கள் யார் கேட்பது" என்று அவன் கத்தினானாம்.

ஆர்கனிதீவில் திமிங்கலங்கள்

ஆர்கனி, மே 18—

ஆர்கனி தீவில், சுமார் 100-க்கு இறந்த திமிங்கலங்களின் உடல் கரையில் ஒதுக்கப்பட்டதால், அதை என்ன செய்வது என்கிற பெரும் பிரச்னை அங்குள்ளவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

"பணம் எதுவும் தரவேண்டாம், திமிங்கலத்தை எடுத்துப் போனால் போதும் என்று அறிவிக்கப்பட்டபோதும் யாரும் முன்வரவில்லை. பின்னர் கடலில் மூன்று மைல் தூரம் படகில் அவைகளை இழுத்துச் சென்று, வெட்டி தண்ணீரில் மூழ்கும்படி செய்வதென்று திட்டமிட்டு அவ்வாறே செய்யப்பட்டது. ஆனால், சில திமிங்கல உடல்கள் மீண்டும் கரைகளில் ஒதுக்கப்பட்டுவிட்டன. இதை என்ன செய்து தீர்ப்பது என்பது இன்னும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

யூகோ எல்லையில் துருப்புகள் நடமாட்டம்

பெல்கிரேட், மே 18—

யூகோ எல்லையிலும், பல்கேரியா ருமேனியாவிலும் ரஷ்ய துருப்புகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதற்கு எதிர் நடவடிக்கை என்ன செய்வது என்பது குறித்து, டிட்டோ சர்க்கார் ஆலோசித்து வருவதாக யூகோ தேசீயக் கமிட்டி காரியதரிசி டெடிஜர் கூறினார்.

டிட்டோவை எதிர்த்து மார்ஷல் வரோஷிலோவ் பல்கேரியாவில் இவர்கள் செய்த பிரசங்கத்தின் பின்னரே இத் துருப்புகள் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ருமேனியாவுக்கும், பல்கேரியாவுக்குமிடையே டான்யூப் மீது ரஷ்யா பாலம் கட்டப்பட்டு வருகிறது என்றும், யூகோ எல்லையை ஒட்டி ரஷ்யர் ஒரு விமான நிலயத்தை நிர்மாணித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஸ்டாலினுக்கு ஜெக் ரயில்வே தொழிலாளர் பரிசு

லண்டன், மே 18—

மார்ஷல் ஸ்டாலினின் சொந்த உபயோகத்திற்காக, தனஸ்லூன் ரயில்வே வண்டியைத் தயாரித்து ஜெக் தொழிலாளர் பரிசாக அளித்திருக்கிறார்கள்.

இதன் சுவர்கள் தோல்களால் மூடப்பட்டு, பாரசீக ஜமக்காளம் தரையில் விரிக்கப்பட்டிருக்கிறதாம். இதில் டெலிபோன் சினிமா பார்க்க வசதி முதலியவைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

ஆர்க்காட்டாருக்குப் பாராட்டு!

ஸிட்னி, மே. 18—

ஸிட்னி மாநாட்டில் சம்பிக்கையை ஊட்டுவதற்குக் காரணமாக இருந்த இந்திய தூது கோஷ்டியோர் என்றும், பிரிட்டனுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதத்தைத் தீர்த்துவைக்க இந்திய தூது கோஷ்டித் தலைவர் தோழர் ஏ. ராமஸ்வாமி முதலியார் மிகவும் பாடுபட்டார் என்றும் ஆஸ்திரேலிய அதிகாரி ஒருவர் கூறினார்.

தோழர் முதலியாரின் முயற்சி காரணமாகத்தான் ஸ்பெண்டர் ஒரு சமரஸ யோசனையை சமர்ப்பித்தாராம்.

ஆப்பிரிக்கர்களின் வேட்டைத் திறன்

ஸாலிஸ்பரி, மே 18—

பிச்சுக்ளை அழிக்கும் பிராணிகளை ஆப்பிரிக்கர்கள் வெற்றிகரமாக வேட்டையாடிவருகின்றனர் என்று, கிராமாந்திரங்களிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

சென்ற வருஷத்தில் 79 பாபூன்கள், 106 நீர்யானைகள், 187 மான்கள், 8898 பாபூன் குரங்குகள், 469 பன்றிகள் வேட்டையாடிகொல்லப்பட்டிருக்கின்றன.

ஸிரியாவிற்குள் தலைகாட்டக்கூடாதாம்

டாமஸ்கஸ், மே 18—

ஸிரிய பிரதேசத்திற்குக் கம்யூனிஸ்டுகள் அல்லது கம்யூனிஸ அபிமானமுள்ளவர்கள் யாரும் வரக்கூடாதென ஸிரிய சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMar- Chetty Street, Madras-1.